**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 57/2024 |
| Deposition of Witness for | : | PW. 5 (LW-10 ) |
| Name | : | திரு.தமிழ்ச்செல்வன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜரில்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு.317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 25th day of February 2026.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி :–**

நான் ஏற்கனவே இந்த வழக்கில் சாட்சியம் அளித்தேன். அப்பொழுது சில ஆவணங்கள் குறியிட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டதன் அடிப்படையில் இன்று நான் தொடர்ச்சியாக சாட்சியம் அளிக்கின்றேன். **TN 47 BA 6054 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும். பின்னிட்டு வழக்கை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து சம்பந்தமாக 09.04.2023–ம் தேதி நான் அலுவலலில் இருந்தபோது புறக்காவல்நிலையத்திலிருந்து தகவல் கிடைக்கப்பெற்றது. எத்தனை மணிக்கு என்று குறிப்பிடவில்லை. அது குறித்து பொது நாட்குறிப்பை பார்த்தால் தெரியும். மருத்துவமனைக்கு நான் சென்ற நேரம் மாலை 7 மணி இருக்கும். விஜயலட்சுமி என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவருடன் வேறு நபர்கள் இல்லை. விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சையில் இருந்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றும்,காயம்பட்ட நபர்அன்றைய தினம் 6.20 மணிக்கு கோவை

KMCH மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் நான் யாரிடமும் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றாலும், நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் நான் எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |